மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**அசல் வழக்கு எண். 52 /2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் :இருளாயி ( பி.வா.சா.2 ) | சாதி : |
| த/பெ. | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

**06.07.2026.**

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1). 26.02.2004 ம் தேதியிட்ட வாதி ஏற்படுத்திய கிரைய ஆவணம் ( ஆவண எண்.366/2004) ன் சார்பதிவக நகல் **பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2).** 26.02.2004 ம் தேதியிட்ட வாதிக்கு, 1 ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்டு ஆவணம் (ஆவண எண்.367/2004) ன் சார்பதிவக நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் கோரிக்கையை ஏற்று குறுக்கு விசாரணை வேறொரு நாளுக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**